අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref.: ED/2/29/08/01/13 (ii) වෙළම
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.:
දිනය / திகதி / Date: 2020. 12.07

பெயர்…………………………………………….
முகவரி……………………………………………
தே, அ. அ. இலக்கம்…………………………….

மொழி மூலம்…………………………………

நேர்முகப் பரீட்சை குழு எண்…………………….

நேர்முக பரீட்சை எண்……………………………

திரு/திருமதி/செல்வி

**நாட்டிலுள்ள மாகாண பாடசாலைகளின் விசேட கல்விப் பிரிவுகளில் நிலவும் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்கு கல்விமாணி பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவை 2 ஆம் வகுப்பில் II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2019**

எனது சம இலக்கம் மற்றும் 2020.09.17 திகதிய கடிதம் தொடர்பாக.

அதற்கமைய தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான பொது நேர்முகப் பரீட்சை 2020.12.15 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்ல, இசுருபாய, கல்வி அமைச்சில் இடம்பெற இருப்பதனால் அத் தினத்தில் கீழ் குறிப்பிட்டவாறு தங்களை தயார் செய்து வருமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**01. பொது நேர்முகப் பரீட்சை**

பின்வரும் சான்றிதழ்களின் **மூலப்பிரதிகளையும் நிழற்பிரதிகளையும் (தங்களால் உறுதிப்படுத்தப்பட்டு)** எடுத்துக் கொண்டு குறித்த நேரத்தில் பங்கேங்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

I. தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டு அல்லது சாரதி அனுமதி பத்திரம்,

II. பிறப்புச் சான்றிதழ் (குறுகியபிரதி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. திருமணத்திற்குப் பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் திருமணச் சான்றிதழுடன் சத்திய பிரமாணக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.)

III. **பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியடப்பட்ட க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சை சான்றிதழ்** (பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர்தர பரீட்சை மற்றும் அதற்கிணைவான பரீட்சையில் சித்தியடைந்தவர்களினால் அது குறித்து உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட சான்றிதழை கொண்டு வருவது கட்டாயமாகும்)

IV. செல்லுபடியாகும் பட்டம் சான்றிதழ் மற்றும் பட்டப்படிபுக்கு பயின்ற பாடங்களை கொண்ட சான்றிதழ் (கட்டாயமனாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

V. பட்டத்திற்கான பயின்ற மொழி ஊடகத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

VI. வதிவிடத்தை உறுதிபடுத்துவதற்கான கிராம அலுவலரின் சான்றிதழ்

VII. அண்மையில் பெறப்பட்ட ஒழுக்கச் சான்றிதழ் 01

VIII. தங்களால் சமர்ப்பிக்கப்படும் சாக்றிதழ்களில் பெயர் வித்தியாசங்கள் காணப்படுமானால் அதற்குரிய சத்திய பிரமாணக் கடிதம்

1.2 மேற்குறிப்பிட்ட சகல ஆவணங்கள் **<u>தகைமைகள் பரிசீலனை செய்யப்படும் தினத்தன்று முன்னிலைப்படுத்தப்பட வேண்டியதுடன், பிறகு முன்னிலைப்படுத்தப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.</u>**

நீங்கள் பொது நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின், அத்தினத்தன்று நடைபெறும் பிரயோக நேர்முகப்பரீட்சைக்கும் தோற்ற வேண்டும்.

## <u>02. பிரயோக பரீட்சை</u>

2.01. அதன் பிரகாரம் இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் 7.2.3.1 வாசகத்தின் பிரகாரம் இலங்கை ஆசிரிய சேவை 3- II தரத்திற்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பிரயோக பரீட்சை தொடர்பாக கீழ்வருமாறு ஆயத்தங்களுடன் சமூகமளிக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

2.02 இந்தப் பரீட்சை இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் ''ஆ'' அத்தியாயத்தின் பிரகாரம் கீழ்வருமாறு மேற்கொள்ளப்படும்.

1) பிரயோகப் பரீட்சைக்காக விண்ணப்பதாரியால் தெரிவு செய்யப்பட்ட தலைப்பொன்றின் கீழ் முன்வைப்பொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்கு கீழ்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொ.இ | பிரயோகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் நியதிகள் | உச்ச புள்ளிகள் | சித்தி பெறுவதற்கு தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | நோக்கமும் பிரவேசமும் | 05 | 02 |
| 2 | ஆளுமையும், குரல் வளமும் | 05 | 02 |
| 3 | தொடர்பாடல் தெளிவு | 05 | 02 |
| 4 | நேரமுகாமைத்துவம் | 05 | 02 |
| 5 | முன்வைப்பு நுட்பங்கள் | 05 | 02 |
| மொத்தப்புள்ளிகள் | | 25 | 10 |

2) பிரயோகப் பரீட்சை முறைமை

I. பிரயோக பரீட்சைக்காக 05 நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.

II. பிரயோக பரீட்சையின் போது பெறக்கூடிய உச்ச புள்ளிகள் இருபத்தி ஐந்து (25) ஆகும்.

III. பிரயோக பரீட்சையில் சித்தி அடைவதற்கு ஒவ்வொரு நியதிகளிலும் குறைந்தது 02 புள்ளிகள் வீதம் பெற வேண்டும்.



3) நியதிகளின் நோக்கங்கள்.

I. நோக்கமும் பிரவேசமும்.

வெற்றிகரமான பாடத்தின் நோக்கங்களையும் தெளிவுபடுத்தலையும், பாடப்பிரவேச திறனையும் மதிப்பிடல்.

II. ஆளுமையும், குரல் வளமும்
ஆசிரியர் ஒருவர் சிறந்த ஆளுமை மிக்கவராக இருப்பதையும் கற்பித்தலின் போது சிறந்த குரல் வளப் பிரயோகத்தையும் மதிப்பிடல்.

III. தொடர்பாடல் தெளிவு.
கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் பொழுது புதிய விடயங்களை பயன் மிக்க வகையில் தொடர்பாடல் செய்யும் திறனையும் மதிப்பிடல்.

IV. நேரமுகாமைத்துவம்.
வழங்கப்படும் காலத்திற்குள் நோக்கங்களை அண்மிக்கும் திறனையும் மதிப்பிடல்.

V. முன்வைப்பு நுட்பங்கள்.
நோக்கத்தை அண்மிப்பதற்கு முன்வைக்கும் நுட்ப முறையை சிறப்பாக பயன்படுத்தும் திறனை மதிப்பிடல்.

03. மேற்குறித்த பொது நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சைக்கு சமூகமளிக்காத விண்ணப்பதாரிகள் தொடர்பாக பின்னர் எவ்வகையிலும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

04. இப்பரீட்சைக்கு சமூகமளிப்பது நியமனம் பெறுவதற்கான தகைமையாக கொள்ளப்படமாட்டாது.

05. இத்தகைமை பரீட்சிப்புக்கு பங்கு பற்றுவது தொடர்பாக பயணக் கொடுப்பனவுகளோ, வேறு படிகளோ வழங்கப்பட மாட்டாது.

இப்படிக்கு உண்மையுள்ள.

வாசனா பீ குணரத்ன
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
(ஆசிரிய தாபனம்)

ஒப்பமிட்டவர்: பேராசிரியர் கே.கபில.சீ.கே. பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு